


**17. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்திருத்தம், தொகுதி மறு வரையறை உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீது மக்களவையில் இன்று பிற்பகல் வாக்கெடுப்பு நடைபெறும்.

2. மாநிலங்களவை துணைத் தலைவராக திரு. ஹரிவன்ஷ் தொடர்ந்து 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

3. அ.இ.அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நிறுத்தப்பட்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி உறுதி அளித்துள்ளார்.

4. தி.மு.க. அரசின் செயல்பாடு காரணமாக, பொருளாதார வளாச்சியில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று அக்கட்சியின் இளைஞரணி செயலர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஜெர்மனியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் யூகிபாம்ப்ரி, மிச்சேல் இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

மக்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை, யூனியன் பிரதேச சட்டத்திருத்த மசோதாக்கள் மீது இன்று பிற்பகல் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

முன்னதாக 2-வது நாளாக இம்மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய தி.மு.க. உறுப்பினர் கனிமொழி,

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா குறித்த அறிவிக்கை நேற்று இரவு வெளியிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா குறித்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அறிவிக்கை வெளியிடப்பட்டது குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் நடைபெறும் தேர்தல்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலேயே மத்திய அரசு இந்த 3 மசோதாக்களையும் அறிமுகம் செய்ய இந்த சிறப்பு கூட்டத்தொடரை நடத்துவதாக குற்றம் சாட்டினார்.

இந்த மசோக்கள் மகளிர் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவு தெரிவிப்பது போல காட்டப்பட்டாலும், அது இந்திய கூட்டாண்மை அமைப்பிற்கு எதிரானது என்று அவர் குறை கூறினார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசி தரூர் பேசுகையில்,

நாடாளுமன்ற விரிவாக்கம் மற்றும் தொகுதி மறுவரையறையை மனதில் கொண்டு மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நடைமுறைப் படுத்துவது குறித்து கவலை வெளியிட்டார்.

உரிய முடிவு எட்டுவதற்கு முன்னர் விரிவான விவாதத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை நடைபெறும் போது, அதிகளவு வள ஆதாரங்கள் வழங்கும் மாநிலங்களின் குரல்கள் ஒடுக்கப்படுவதற்கான அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதனிடையே நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு பேசுகையில்,

இதுவரை நடைமுறைப் படுத்தாத பழைய சட்டங்களை செயல்படுத்துவதற்காகவே மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவிற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டார்.

எதிர்கட்சிகள் இவ்விஷயத்தை அரசியலாக்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது சமூக வலைதளப் பதிவில், வலிமையான இந்தியாவின் அடையாளமாக, வலுவான மகளிர் ஆற்றல் திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசத்தில் உள்ள பெண்கள் அனைத்து களங்களிலும், அர்ப்பணிப்புடனும், அளப்பறிய சேவை

மனப்பான்மையுடனும், உறுதியுடனும் செயலாற்றுவதாக தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

இதனிடையே மக்களவையிலும், சட்டப் பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் 106-வது அரசியல் சாசன சட்டத்திற்கான அறிவிக்கை நேற்றிரவு வெளியிடப் பட்டதை அடுத்து அச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இதற்கான அறிவிப்பை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

2023-ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த சட்டம் மூலம் கூட்டாண்மை அமைப்பின் அனைத்து நிலைகளிலும் மகளிருக்கு சம வாய்ப்பிற்கான தேசிய பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிகு சட்டம் மகளிருக்கு மூன்றில் ஒருபகுதி இடஒதுக்கீட்டிற்கு மகளிருக்கு வழிகோலுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹரிவன்ஷ்

மாநிலங்களவை துணைத் தலைவராக திரு. ஹரிவன்ஷ் தொடர்ந்து 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

முன்னதாக அவரை துணைத் தலைவராக தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை மாநிலங்களவை முன்னவர் திரு. ஜே. பி. நட்டா முன்மொழிந்தார்.

திரு. ஹரிவன்ஷ் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி,

மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

MUSIC

.. தேர்தல் களம் ..

MUSIC

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட

சட்டப்பேரவை தொகுதிகள் குறித்த

கண்ணோட்டம் இன்றைய தேர்தல் களத்தில்

இடம் பெறுகிறது.

MUSIC

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் பிரச்சாரம்

தமிழ்நாட்டில் 234 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வரும்
23-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய இன்னும் 4 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேலம் சங்ககிரியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொண்ட அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி சென்ற ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கொண்டுவரப்படும் என்று கூறினார்.

மேட்டூர் அணை உபரி நீரிலிருந்து 100 ஏரிகளை நிரப்பும் திட்டம் சேலம் மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்த தி.மு.க. இளைஞரணி செயலர் திரு. உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. அரசின் நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதார வளாச்சியில் முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக கூறியுள்ளார்.

ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்குவதன் மூலம், ஆண்களின் பிரதிநிதித்துவம் குறையாமல் இருக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 சதவிகிதமாக உயர்த்தபடுவதாக கூறினார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின், திண்டுக்கல்லில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் செங்கல்பட்டு மாவட்டத்திலும்,

தே.மு.க.தி.க. பொதுச்செயலர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் விருதுநகரிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் மாவட்டங்கள்

சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி இறுதிக்கட்ட தேர்தல் நடைமுறைகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

இதன்படி, 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தபால் வாக்கு பதிவு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் ஆகியவற்றை பொருத்தி பாதுகாப்பு அறைகளுக்கு கொண்டு செல்லும் இறுதிக்கட்டப் பணிகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தக்கூடிய வாக்குப்பதிவு பொருட்களை பிரித்து அனுப்பும் பணிகளை தேர்தல் அலுவலர் திரு. ரத்தினசாமி இன்று ஆய்வு செய்தார்.

தர்மபுரி மாவட்டத்தில் தேர்தல் விதிமீறல் தொடர்பாக வாக்காளர்கள் தொலைப்பேசி வாயிலாகவே, சி-விஜில் செயலி மூலமாகவோ புகார்களை தெரிவிக்கலாம் என்று தேர்தல் அலுவலர் திரு. சதீஷ் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் நாளன்று 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உரிய ஆவணங்களுடன் நகரப் பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ளலாம் என்று தேர்தல் அலுவலர் திரு. தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் தேர்தல் நாளான வரும் 23-ம் தேதி விடுமுறை வழங்காத தொழில் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. பொற்கொடி எச்சரித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வரும் 21, 23 மற்றும் அடுத்தமாதம் 4 ஆகிய தேதிகளில் மதுபானக் கடைகள் மூடப்பட வேண்டுமென்று மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. சினேகா தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி ராசிபுரத்தில் மனித சங்கிலி விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் காவல் துறைக்கான தபால் வாக்கு செலுத்தும் பணிகள் இன்று தொடங்கியுள்ளன.

ஆவடி காவல் ஆணையரகத்தின் பணிபுரியும் 5 ஆயிரத்து 600 காவல்துறையினர் தபால் வாக்குகளை செலுத்தி வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலில் சித்திரை திருவிழா முகூர்த்தக்கால் நடும் நிகழ்வு இன்று காலை கோலாகலமாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

தேனி வாய்ஸ்

கும்பக்கரை அருவியில் நீர்வரத்து இல்லாததால் சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை தடைவித்துள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஜெர்மனியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, நியூசிலாந்தின் மிச்சேல் வீனஸ் இணை – ஜெர்மனி இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖